# மன்னித்து மறத்தல்

ஒரு பெரியார் ஒரு முறை தன் பணியாளரிடம் உது செய்வதற்குத் தண்ணீர் கொண்டுவருமாறு கூறினார். பணியாளன் சூடான தண்ணீரைக்கொண்டு வந்தான். துரதிர்ஷ்டவசமாக அந்தத் தண்ணீர் தவறி அந்தப் பெரியாரின் கால்மீது விழுந்துவிட்டது. அவருக்குக் கோபம் வந்தது, மோசக்காரனே நீ என் கால்களை எரித்துவிட்டாய், தண்டனைக்குத் தயாராகிவிடு என்றார். பணியாளன் தண்டனையைப்பற்றிக் கேட்டுப் பயந்துவிட்டான், பின்பு தயக்கத்துடன் கூறினான்: பெரியாரே, நீங்கள் நற்குணங்களுக்கு முன்மாதிரி யானவர்கள், மக்கள் உங்களிடம் வந்து நல்லொழுக்கத்தைக் கற்றுச்செல் கின்றனர், தயவு செய்து என் விஷயத்தில் அவசரப்படாதீர்கள், அல்லாஹ் கூறியுள்ளதை நினைவுகூறுங்கள் என்றான்.

அந்தப் பணியாளனின் பேச்சைக்கேட்டு பெரியாரின் கோபம் சற்று குறைந் தது, அல்லாஹ்கூறியுள்ளது என்று நீ எதனைக்கூறுகின்றாய் என்று கேட்டார்.

www.uzairfalahi.com

அவன் கூறினான், அல்லாஹ் கூறுகிறான்: (134: آل عمران) وَٱلۡكَٰظِمِينَ ٱلۡغَيۡظَ ﴿١٣٤﴾

பொருள்: *மேலும், அவர்கள் சினத்தை அடக்கிக்கொள்வார்கள். (3:134)*
பெரியார் கூறினார்: சரி, நான் என் சினத்தை அடக்கிக்கொள்கிறேன். பணி யாளன் அந்த வசனத்தின் அடுத்தப் பகுதியை எடுத்துக்கூறினான் :

**وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ ﴿١٣٤﴾ (آل عمران :134)**

பொருள்: *மேலும், மக்களின் தவறுகளை மன்னித்து விடுவார்கள்.*
பெரியார் கூறினார்: சரி, நான் உன்னை மன்னித்துவிட்டேன். பணியாளன் அந்த வசனத்தின் இறுதிப் பகுதியை எடுத்துக் கூறினான் :

**وَٱللَّهُ يُحِبُّ ٱلۡمُحۡسِنِينَ ﴿١٣٤﴾ (آل عمران :134)**

பொருள்: *இத்தகைய உயர்ந்த பண்பினரை (முஸ்லிம்களை) அல்லாஹ் நேசிக்கின்றான்.*
பெரியார் கூறினார்: சரி, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக நான் உனக்கு சுதந்திரம் அளித்துவிட்டேன்.

மன்னித்து மறப்பதைப்பற்றித் திருக்ஃகுர்ஆன் ஒரு சிறந்த முன்மாதிரியை எடுத்துரைக்கின்றது. ஹஜ்ரத் யூசுஃப் (அ) மற்றும் அவர்களுடைய சகோ தரர்களுடைய வரலாற்றை எடுத்துரைக்கும்போது திருக்ஃகுர்ஆன் கூறுகின் றது: ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்கள்மீது அவருடைய தந்தையான ஹஜ்ரத் யாஃகூப் (அ) மிகவும் அதிகமாகப் பாசம் கொண்டிருந்தார்கள், அதன் காரணமாகவே, அவருடைய மற்ற சகோதரர்கள் அவர்மீது பொறாமை கொண்டனர், பொறாமையின் காரணமாக அவரை தம் வழியிலிருந்து அகற்றும் விதமாக அவரை ஒரு பாழ்க்கிணற்றில் போட்டும் விட்டனர்.

அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்களைக் காப்பாற்றிக் கொண்டான், அத்துடன் அவருக்குக் கண்ணியமும் ஆட்சி அதிகாரமும் அளித்தான், எகிப்து நாட்டு அரசரின் மந்திரியாக நியமிக்கப்பட்டார்கள். கடும் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் இதே பொறாமையாளர்களான சகோதரர்கள் ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்களிடம் உணவு தானியங்கள் பெற்றுக் கொள்ள வந்தார்கள். ஹஜ்ரத் யூசுஃப் (அ)அவர்கள் தம் சகோதரர்களை அடையாளம் கண்டுகொண்டபின்பும் அந்த உண்மையை மறைத்து வைத்தார்கள். பலமுறை அவர்கள் வந்துகொண்டிருந்த நிலையில் சகோதரர்களுக்கும் இவர்தான் நாம் பாழ்க்கிணற்றில் போட்டுவிட்ட அந்த ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்கள் என்று தெரிந்துவிட்டது. மிகவும் அச்சம் கொண்டார்கள், பிடிக்கப்பட்டுவிடுவோம், ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்கள் பழி வாங்குவார்கள், என்ன நடக்குமோ என்று பயந்தார்கள். ஆனால், ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்கள், அவர்கள் அனைவரையும் மன்னித்துவிட்டார்கள் மற்றும் கூறினார்கள்:

لَا تَثْرِيبَ عَلَيْكُمُ ٱلْيَوْمَ يَغْفِرُ ٱللَّهُ لَكُمْ وَهُوَ أَرْحَمُ ٱلرَّٰحِمِينَ ﴿٩٢﴾ **(يوسف: ٩٢)**

பொருள்: *இன்று உங்கள்மீது எந்தக் குற்றமும் இல்லை, அல்லாஹ் உங்களை மன்னிப்பான், அவன் யாவரையும்விட அதிகமாகக் கருணை புரிபவனாவான். (யூசுஃப்:92)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு முறை ஒரு மரத்தடியில் தூங்கிக்கொண்டிருந்தார்கள், ஒரு காஃபிரான பகைவன் கையில் ஏந்திய வாளுடன் நின்று கொண்டிருந்தான், அவரை எழுப்பினான் மற்றும் கூறினான், முஹம்மத் ﷺ அவர்களே, இன்று என்னுடைய வாளிலிருந்து உங்களை யார் காப்பாற்றுவார்கள்? இறைத்தூதர் ﷺ அவர்கள் அமைதியுடனும் முழு நிம்மதியுடனும் கூறினார்கள். அல்லாஹ்! இதனைக் கேட்டவுடன் அவர்களைத் தாக்க வந்தவன் அதிர்ச்சியடைந்து அவன் கைகள் நடுங்க ஆரம்பித்தன, அவனுடைய வாளும் கீழே விழுந்துவிட்டது. அப்போது, வாளைக் கையில் எடுத்துக்கொண்டு இறைத்தூதர் ﷺ அவர்கள் அவனைக் கேட்டார்கள், இப்போது உன்னை யார் காப்பாற்றுவார்கள்? அவன் கூறினான், உங்களிடமிருந்து நல்லதையே எதிர்ப்பார்க்கிறேன். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவனை மன்னித்துவிட்டார்கள் **(متفق عليه)**

ஒரு யூதப்பெண் ஆட்டுக்கறியைப் பொறித்து அதில் விஷத்தைக் கலந்து பின்பு அந்த விஷம் கலந்த ஆட்டுக்கறியை இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு அன்பளிப்பாக அளித்தாள். இறைத்தூதர் ﷺ என்ற காரணத்தால் அல்லாஹ்வும் அவர்களுக்கு இதனைத் தெரிவித்துவிட்டான். அந்த யூதப்பெண் அழைக்கப்பட்டாள். இறைத்தூதர் ﷺ அவர்கள் நீ இவ்வாறு ஏன் செய்

www.uzairfalahi.com

*தாய் என்று கேட்டார்கள், அவளும் வெளிப்படையாகவே நான் உங்களைக் கொல்ல நினைத்தேன் என்று கூறினாள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், அல்லாஹ் என்மீது உனக்குக் கட்டுப்பாட்டைக்கொடுப்பது என்பது இயலாத ஒன்று. நபித்தோழர்கள் கேட்டார்கள், இறைத்தூதரே ﷺ எங்களுக்கு அனுமதியளியுங்கள் நாங்கள் அவளைக் கொன்று விடுகிறோம், கருணை வடிவான இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், இல்லை அவளைச் செல்லவிடுங்கள்* **(متفق عليه).**

*ஹஜ்ரத் மஃஅன் பின் ஜ்ஸாஇதா (ர) அவர்களிடம் அதிகமான கைதிகள் இருந்தார்கள், அவர்களைக் கொன்றுவிடுவதாற்காகச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு கைதி கூறினார், நாங்கள் உங்கள் வசமுள்ள கைதிகள், நாங்கள் பசியாகவும் பட்டிணியாகவும் இருக்கிறோம், இந்த நிலையில் எங்களைக் கொல்லாதீர்கள். ஹஜ்ரத் மஃஅன் (ர) அவர்கள் கைதிகளுக்கு உண்ணவும் பருகவும் அளியுங்கள் எனக்கட்டளையிட்டார்கள். கைதிகள் அனைவரும் சாப்பிட்டுவிட்டபின் ஒருவன் கூறினான், இப்போது நாங்கள் உங்கள் விருந்தினரைப் போன்று ஆகிவிட்டோம், நீங்கள் உங்கள் விருந்தினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்விர்கள்? இறுதியில் ஹஜ்ரத் மஃஅன் (ர) அவர்கள் கூறினார்கள், நான் உங்கள் அனைவரையும் மன்னித்துவிட்டேன், செல்லுங்கள் என்று.*

*மன்னித்துவிடுவது என்பது ஒருவர் ஒன்றைச் செய்யத் தவறிவிடுவது அல்லது செய்த அவருடைய தவறுக்காக தண்டிக்காது மன்னித்துவிடுவது என்பதாகும். அல்லாஹ் தஆலா பாவமன்னிப்பு கோருவோருடைய பாவங்களை மன்னித்துவிடுகிறான். இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஒரு பிரபலமான துஆ, உண்டு:* **اللَّهُمَّ إِنَّكَ عُفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّي** பொருள்: *எங்கள் இறைவனே, நீ மன்னித்துவிடுபவன், நீ மன்னிப்பதை நேசிப்பவன், ஆகவே, என்னை மன்னித்துவிடுவாயாக.(திர்மிதி)*

*ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய நற்பண்புகளைப்பற்றிக் கூறுகிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் வாழ்நாள் முழுவதிலும் யார் மீதும் கைஓங்கியதில்லை, எந்த ஒரு பணியாள் மற்றும் பெண் மீதும்கூட, ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் நிச்சயம் செய்துள்ளார்கள் (முஸ்லிம்)*

*ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்,இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு நபியுடைய வாழ்க்கையைப்பற்றி எடுத்துரைத்த அந்தக்காட்சி என் கண்முன் இருக்கின்றது, ஒரு நபியை அந்த நபியுடைய மக்களே அடித்து இரத்தம்*

www.uzairfalahi.com

சிந்தும்படி செய்துவிட்டனர், அந்த நபி தன் முகத்தின் மீதிருந்து இரத்தத் தைத் துடைத்தவராக அல்லாஹ்விடம் துஆ செய்துகொண்டிருந்தார்கள், அல்லாஹ்வே என்னுடைய மக்களை மன்னித்துவிடு, இவர்கள் அறியாதவர் களாக இருக்கின்றனர் **(متفق عليه)**, ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் ஒருவர் இணை வைப்போரை சபித்துவிடுமாறு கேட்டுக்கொண்டார், அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், இல்லை, நான் சபிப்ப வனல்லமாறாகநான்கருணைநபியாகஅனுப்பப்பட்டுள்ளேன்(முஸ்லிம்).

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மன்னித்து மறப்பதற்கான மிகவும் சிறப்புக்குரிய ஒளிர்கின்ற உதாரணம் அவருடைய தாயிஃப் பயணத்தின் நிகழ்வாகும். அவர்கள் ﷺ மார்க்கத்தின்புறம் அழைப்பதற்காக தாயிஃப் நகரத்திற்குப் பயணம் மேற்கொண்டார்கள், அங்குள்ள மக்கள் அவர்களு டனும் ﷺ ஹஜ்ரத் ஜ்ஸைத் பின் ஹாரித்ஸா (ர) அவர்களுடனும் மிகவும் மோசமான முறையில் நடந்துகொண்டார்கள், ஒழுக்கக்கேடான வாலிபர் களை அவர்களுக்குத் தொல்லைகளைக்கொடுத்துத் துன்புறுத்துமாறு ஏவி விட்டார்கள். அவர்கள் கற்களால் இரத்தம் சொட்டச்சொட்டத் தாக்கித் துன்புறுத்தினார்கள். அப்போது ஜிப்ரீல் (அ) அவர்கள் மலைகளைப் பேணும் மலக்குமார்களுடன் வந்து கூறினார்கள் அனுமதி அளித்தால் தாயிஃப் நகர மக்களை இரு மலைகளுக்குமிடையில் மோதி அழித்து விடுகிறோம். இறைத்தூதர் ﷺ அவர்கள் வேண்டாம் என்று கூறி, எனக்கு நம்பிக்கை உள்ளது, இவர்களுடைய அடுத்தத் தலைமுறையினர் அல்லாஹ் வின் ஏகத்துவத்தைப் புரிந்துகொண்டு இணை வைப்பதைத் தவிர்த்து விடுவார்கள் என்று கூறினார்கள் **(متفق عليه)**.

www.uzairfalahi.com

இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மன்னித்து மறப்பதற்கான சிறப்புக்குரிய மற்றொரு உதாரணம் அவர்கள் ﷺ வெற்றி வாகை சூடியவராக தன்னு டைய தோழர்களுடன் மக்காஹ் நகரில் பிரவேசித்த நிகழ்வாகும். அவர் களுக்கு மிகவும் பிரியமான நகரமான மக்காஹ்வில் அல்லாஹ் ஒருவன் என்று கூறிய குற்றத்திற்காக அந்நகர மக்களே அவர்களை எந்த அளவிற்குத் துன்புறுத்தினார்கள் என்றால் தான் பிறந்த நகரத்தையே விட்டு வெளியே றும் அளவிற்குத் நிர்ப்பந்தப்படுத்திவிட்டனர். அவர்களைத் துன்புறுத்திய வர்கள் தங்கள் கண் முன்னால், அவர்கள் தாம் செய்த கொடுமைகளை யெல்லாம் நினைத்து வெற்றியாளராக வருகை தரும் இறைத்தூதரான முஹம்மது ﷺ அவர்கள் எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்ளப்போகி றார்கள் என்று அச்சத்துடன் காத்துக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இறைத்தூதர் ﷺ அவர்கள் மக்காஹ் வாசிகளை நோக் கிக்கேட்டார்கள், மக்காஹ்வாசிகளே, நீங்களே கூறுங்கள் உங்களுடன்

இன்று எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? அனைவரும் ஒரே குரலில் கூறினார்கள், நல்லதையே செய்யுங்கள், நீங்கள் ஒரு சிறந்த தகப்பனும் ஒரு சிறந்த மகனாகவும் உள்ளீர்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவர்கள் அனைவருக்கும் வாழ்வளிக்கும் வகையில் கூறினார்கள், சென்றுவிடுங்கள், நீங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டீர்கள் (சீரத்து இப்னு ஹிஷ்ஷாம்)

## மன்னித்து மறப்பதன் சிறப்பு

மன்னித்து மறப்பதைப்பற்றி அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَإِن تَعْفُوا۟ وَتَصْفَحُوا۟ وَتَغْفِرُوا۟ فَإِنَّ ٱللَّهَ غَفُورٌ رَّحِيمٌ ﴿١٤﴾ (التغابن :14)

பொருள்: மேலும், நீங்கள் அவர்களுடைய செயல்களைச் சகித்துப் புறக்கணித்துவிடுவீர்களானால், அவர்களை மன்னிப்பீர்களானால், திண்ணமாக அல்லாஹ் பெரும் மன்னிப்பவனாகவும் கருணைமிக்கவனாகவும் இருக்கின்றான். (அத்தங்காபுன்:14)

மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

وَلْيَعْفُوا۟ وَلْيَصْفَحُوٓا۟ ۗ أَلَا تُحِبُّونَ أَن يَغْفِرَ ٱللَّهُ لَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٢٢﴾ (النور :22)

பொருள்: அவர்களை மன்னித்துவிடவேண்டும், பொறுத்துக்கொள்ள வேண்டும், அல்லாஹ் உங்களை மன்னிக்கவேண்டுமென நீங்கள் விரும்புவதில்லையா, மேலும், அல்லாஹ் பெரும் மன்னிப்பவனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றான். 24:22

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், எவர் ஒருவரைப் பழிவாங்கும் ஆற்றல் பெற்றிருந்தும் தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்வாரோ, அப்படிப்பட்ட ஒருவரை அல்லாஹ் தஆலா மறுமை நாளில் எல்லோர் முன்பாக அழைத்துக் கூறுவான், உனக்கு எந்த ஹூரீன் வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக்கொள். (திர்மிதி, அபூ தாவூத், இப்னு மாஜா)

மன்னித்து மறக்கும் பண்பினையுடைய ஒருவருக்கு அல்லாஹ் பெருமையும் மகத்துவமும் அளிக்கின்றான், மக்களுடைய பார்வையில் அவருடைய கண்ணியம் அதிகரித்துவிடுகிறது, இதன் காரணமாக தவறிழைத்தவனும் அவனுக்குமுன் தலை குனிய ஆரம்பித்துவிடுகிறான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

ٱدْفَعْ بِٱلَّتِى هِىَ أَحْسَنُ فَإِذَا ٱلَّذِى بَيْنَكَ وَبَيْنَهُۥ عَدَٰوَةٌ كَأَنَّهُۥ وَلِىٌّ حَمِيمٌ ﴿٣٤﴾ (فصلت: 34)

www.fuzailfalahi.com

பொருள்: *மிகச் சிறந்த நன்மையைக்கொண்டு நீர் தீமையைத் தடுப்பீராக. அபபோது உம்முடன் கடும் பகைமை கொண்டிருந்தவர்கூட உற்ற நண்பராய் ஆகிவிடுவதைக்காண்பீர். (ஃபுஸ்ஸிலத்:34)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஸதஃகா கொடுப்பதினால் ஒருவருடைய செல்வம் குறைந்துவிடுவதில்லை, மன்னித்து மறக்கும் பண்பினையுடைய ஒருவருக்கு அல்லாஹ் பெருமையும் மகத்துவமும் அளிக்கின்றான் மற்றும் யார் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக எனிமையும் தாழ்மையும் மேற்கொள்கிறார்களோ அல்லாஹ் தஆலா அவர்களுக்கு உயர்வினை அளிக்கின்றான். (முஸ்லிம்)

* * *

www.uzairfalahi.com